குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 90–2023

அ.சா. 4

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கோபாலச்சாரி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.வெங்கடாச்சாரி |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 66 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 17.03.2026**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் குடிசாகனப்பள்ளியில் குடியிருந்து வருகிறேன். கோட்டசாதனப்பள்ளி கிராமத்தை சேர்ந்த பாலாஜியை என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர்யில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்தை ஏதற்காக எப்போது செய்தேன் என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.** வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி சட்டப்படி 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

கடந்த 12.05.2019ம் தேதி இரவு 11.00 மணிக்கு குடிசாதனப்பள்ளி கிராமத்தில் வெங்கடேஷ் என்பவரின் வீட்டின் பின்புறம் புகார்தாரர் பாலாஜியை ஆஜர் எதிரிகள் தாக்கி காயப்படுத்திய வழக்கில் 14.05.2019 ம் தேதி பகல் 12.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்த போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து தயாரித்த பார்வை மகஜரில் நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு அந்த விவரத்தையும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் என்னுடைய ஊர்க்காரர்கள் என்பதால் எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.</u>

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**